# மனிதம்



மூதூர் எம்.எம்.ஏ.அனஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதம்

மூதூர். எம்.எம்.ஏ.அனஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விபரம்

நூலின் பெயர் : மனிதம்

விடயம் : கவிதை

ஆசிரியர் : மூதூர்.எம்எம்.ஏ.அனஸ்

அட்டைப்படம் : ஐ.விஜய்

வெளியீடு : மூதூர் கலை இலக்கிய ஒன்றியம்

உரிமை : ஆசிரியருக்கு

முதற்பதிப்பு : மே. 2014

பிரதிகள் : 500

ISBN : 978-955-44598-7-8

விலை : 200/=



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே.........


★ குறள் வெண்பா 07
★ வெண்பா 21
★ விடியல் புலரட்டும் 32
★ மூதூர் கங்கைக் கடல் 33
★ மடமைத் தனத்தின் மகுடம் 35

★ இறையின் தீர்ப்பு வந்திடுமே! 37
★ நமக்கோர் தலைமை வரும்! 38
★ உண்மையெ உயர்வு கண்டது. 39
★ புதுயுகம் புலர்ந்திடுமே! 40
★ புரிகிறதா? 41
★ இலட்சிய மாந்தன் எழுத்தாளன் 43
★ அறிவின் சுடரே! 45
★ புதிய ஆண்டே! புத்தொழிலே 47
★ மழையே! 50
★ துட்டர் 52
★ நினைவே 53
★ ஏற்றம் கண்டிடுமோ! 54
★ தேடுகிறேன் 56
★ பொல்லார் பொரியார் ஆகிட்டார் 57
★ நஞ்சே போல்வர் என்போமே 58
★ உரியவர்கள் உரைக்கும் போது 60
★ அமைதி நிலவ வேண்டும் 61
★ இறைஞ்சல் 62
★ உண்மை உணர்ந்து நடந்திடுவாய்! 63
★ ஏற்றம் வாழ்வில் காண்பாயே! 65
★ அகத்தில் நினைவாய் வருகிறது 66
★ பிறரின் முடிவில் இருந்தாயேல் 67




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

குறளுடனே வெண்பாவும் கூடப்பல் பாவும்
அறநெறியே ஓங்க அமைந்து – சிறப்புற்ற
இந்நூலைப் பாட்டனுமர் நெய்னார்க்கு யானுமே
தந்தேன் சமர்ப்பணமாய்த் தான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

"புலவர்க்கும் வெண்பா புலி" என்று சொல்வார்கள் எனினும் என் உளப்பரப்பில் பலவருடங்களாக வெண்பாக்கள் படைக்க வேண்டுமென்ற பெரும் வாஞ்சை ஊற்றெடுத்தோடிக் கொண்டிருந்தது. அதனால் மிகத் தெளிவாக வெண்பா இலக்கணங்களைக் கற்று வெண்பாக்களைப் படைக்க வேண்டும் என்ற நோக்குடன் வெண்பா இலக்கணங்களில் நன்கு தேர்ச்சி பெற்ற கவிஞர்களான கலாபூசணம் காவியக் கோன், ஜின்னா சரிபுத்தீன், கலாபூசணம் கவிஞர் கிண்ணியா ஏ.எம்.எம்.அலி, மூதூர் எம்.ஏ.பரிது, கலாபூசணம் கவிஞர் தாமரைத் தீவான், மூதூர் தீசன் குரூஸ் (ஆசிரியர்) ஆகியோரிடம் சென்று வெண்பா இலக்கணங்களை மிகத் தெளிவாக கற்றுக் கொண்டேன்.

ஓர் வெண்பாவில் மாமுன் நிரை எழுத்தும், விளம்முன் நேர் எழுத்தும், காய் முன் நேர் எழுத்தும்தான் கட்டாயம் வரும் என்பதையும் அதே போல் ஓர் வெண்பா நாள், மலர், காசு, பிறப்பு ஆகிய நான்கு சொற்களின் சூத்திரத்தில் ஏதாவது ஒன்றில் தான் முடிவுற வேண்டும் என்பதையும் தெளிவுறக் கற்றுக் கொண்டேன். இவ்விலக்கணங்களையெல்லாம் அடிப்படையாகக் கொண்டு "ஒரு விகற்பக்" குறள் வெண்பாக்களையும் "இரு விகற்ப" நேரிசை வெண்பாக்களையும் யாத்தேன். இவற்றுடன் நான் யாத்த பல மரபுக் கவிதைகளையும் ஒன்று சேர்த்து "மனிதம்" எனும் பெயரில் சிறு கவிதை நூலாக வெளியிடுவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்நூலை வெளியீடு செய்த மூதூர் கலை இலக்கிய ஒன்றியத்திற்கும் இந்நூலுக்கு அட்டைப்படம் வடிவமைத்த ஐ.விஜய் அவர்கட்கும் இந்நூலை பிரசுரித்த எஸ்.எஸ்.டிஜிட்டல்ஸ் நிறுவனத்தார்க்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

தொ.பேசி - 0776288299

**எம்.எம்.ஏ.அனஸ்**
**பெரிய பாலம்**
**மூதூர்-5**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துகிறேன்

1. மூதூர்ப் புலவர் உமர்நெய்னார்
முறையாம் பேரர் 'அனஸ்' என்பார்
காதூர் மனிதக் கவிநூலைக்
காட்டிக் கருத்துரை தருகென்றார்!

2. கற்றேன் நற்குறள் - நேர்வெண்பா
கனவெவ் வேறு பாடல்எலாம்
நற்றேன் எனவே சுவைத்தனவே,
நானும் சுவையில் தோய்ந்தேனே!

3. புதுக்கவி வளரும் காலமிதில்
புகன்றார் மரபில் யாவையுமே
புதிதாய்ப் பார்த்தேன், நெய்னாராம்
புலவர் பாவையும் பார்த்தேனே!

4. வங்கக் கடலைப் போன்றுதமிழ்
வந்தே அலையலை பாடல்களாய்த்
தங்கிப் பெருகுதல் ஓர்வியப்பே,
தரலாம் இன்னும் இவர்பலநூல்!

5. முயற்சிகள் பலவாம் - தேடல்பல!
மூதூர் மண்ணின் பெருமைபல!
அயர்ச்சியி லாமல் இயங்கியுள்ளார்,
'அனஸ்' ஓர் அருமை எழுத்தாளர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. நானும் மூதூர் மண்ணதிலே
நாற்பதுகளிலே வாழ்ந்தவனே!
மூணுதுறையையும் நெய்னாரின்
முத்தமிழாகப் பார்த்தவனே!

7. நற்சிந் தனையும், இறைவிருப்பும்,
நல்ல கருத்தும் தரும்பாநூல்
கற்போர் நெஞ்சை மகிழ்விக்கும்,
காய்வில் லாதார் பெறமுனைவார்!

8. புலமை மரபில் வந்த 'அனஸ்'
போகப் போகப் புகழ்பெறுவார்!
நலமுடன் வாழ்ந்து மேன்மேலும்
நன்னூல் தர யான் வாழ்த்துகிறேன்.

**'தாமரைத்தீவான்'**
(ஈச்சந்தீவு – கிண்ணியா)
04-06-2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறள் வெண்பா (ஒரு விகற்பம்)

01. பொற்பதியும் பாரும் படைத்தேதான் காக்கின்ற
நற்கருணை நாயனருள் நாடு

02. உலகைப் படைத்தாளும் ஓரிறையை என்றும்
பலமாய் உளத்திலே பற்று.

03. இதயத்தில் நன்கு இறையை இருத்தி
நிதமும் அறநெறியை நாடு.

04. வங்கக் கடலதுபோல் வற்றாமல் என்றுமே
பொங்கிடவே நன்மை புரி.

05. நல்வார்த்தை நாவினில் நாளும் நிலைபெறவே
சொல்லெலாம் நன்காய்ந்தே சொல்லு.

06. இறைதீர்ப்புத் தாமதமாய்த் தான்வரினும் என்றும்
நிறைதீர்ப்பாய் நிற்கும் நினை.

07. நல்ளுள்ள மாந்தர்தம் நன்மதிப்பை மாய்ப்பதிலே
பொல்லார்க்கு இன்பம் பெரிது.

08. கட்டிய மங்கைக் கனிமொழியில் வீழாது
கிட்டிய உன்னுறவைக் கார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. மற்றோர் இடரில் மகிழ்சியே காண்கின்ற
அற்பத் தனத்தை அகற்று.

10. வேசங்கள் போட்டிங்கே வஞ்சகமாய் வாழ்வோர்கள்
நீசரே என்று நினை.

11. புன்னகை புரிந்திங்கே பூரிப்பாய்ப் பேசிடும்
தின்மையோர் நல்லுறவோ தீது.

12. சேர்ந்து சிரிப்போரைச் சீரியோர் என்றேதான்
தேர்ந்திடல் தீதாகும் தேர்.

13. தாழ்நிலைக்குத் தானாயின் தாரணியும் நன்குன்னை
வீழ்என்றே விழ்த்தும் விரைந்து.

14. முட்டாள் முழுவாழ்வும் மூதறிஞன் ஓர்நாளை
எட்டாது என்றேதான் எண்ணு.

15. கல்லும் கனிந்து கனிரசமாய்க் காணுமே
நல்முயற்சி நாடும் நபர்க்கு.

16. தத்துவ ஞானிக்குத் தேரையுமே ஆசான்தான்
கத்துமது பாடமே காண்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. நல்லோர்கள் செய்கின்ற நாளாந்தச் செய்கையெல்லாம்
சொல்லுமே நேர்மைச் சிறப்பு.

18. கனவெல்லாம் பூனைக்குக் காட்டெலிபோல் தீயோர்
நனவின் நினைவெல்லாம் நாசம்.

19. உயர்ச்சி உரித்தென்றே உந்தனுக் காக
உயர்வாக நேரம் உணர்.

20. நல்லாரை நாளுமே நாசம் நசித்திடினும்
பொல்லாங்கு செய்யார் பிறர்க்கு.

21. நீதி நெறியில் நெடுநிலத்தே நிற்கின்ற
ஓதியோர் நல்லுறவை ஓம்பு.

22. புவியின் பிறப்பினிலே புண்போல்வர் நன்றி
நவிலா உளத்தார் நவில்.

23. குருடனுக்கு மாணிக்கம் கூழாங்கல் ஒன்றாம்
வருவிடயம் நான்காய்ந்தே வாழ்.

24. இறையுவர்க்கும் ஆடை இனிதே அணிந்தும்
கறையுள்ளம் கலையுமோ காண்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. தலைக்கனமே கொண்டோர்கள் தாரணியில் என்றும்
நிலைகுன்றிப் போவதே நீதி.

26. பஞ்சமா பாதகரைப் பாங்கராய் ஏற்றிடிலோ
நஞ்சாய் உனக்காவர் நம்பு.

27. பொல்லார் துணையாகிப் போன தலைமைகள்
நல்லார்க்கும் நன்மைக்கும் நச்சு.

28. மாற்றாரின் சொத்தைநீ மன்றாடி வென்றிடினும்
தோற்பாய் இறைதீர்ப்பில் தான்.

29. இறைநேச ஆடை இனிதே அணிந்தும்
நிறையுடையோர் ஆகாரே நீசர்.

30. செல்வத்தில் சேர்வோர் செழுமை குறைந்திடிலோ
செல்வரே தூரமாம் செப்பு.

31. வஞ்சக உள்ளமாய் வாழ்வில்த் திழைக்கின்ற
நெஞ்சத்தார் நல்லுறவை நீக்கு.

32. பணம்கண்ட பின்னால் பிறப்புறவை நோக்கார்
பிணம்போல்வர் தானே புவிக்கு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33. காசுபணம் ஒன்றேதான் காசினி வாழ்வென்று
பேசுவோர் கேடரே பார்.

34. அடுத்தோரின் சொத்துக்கு ஆசைகொள் அற்பர்
நெடுநிலத்தின் நோயாம் நினை.

35. நம்பிக்கை மோசடியை நாளுமே நாடிடுவோர்
இம்மண்ணின் கேடென் றியம்பு.

36. சத்தியத்தின் சான்றாகச் சீவிப்போர் இவ்வுலகில்
உத்தமத்தின் உண்மை உரு.

37. வஞ்சக உள்ளத்தின் வாழ்விடமாய் வாழ்வோரை
நெஞ்சத்தை விட்டென்றும் நீக்கு.

38. பாமரை ஏமாற்றும் போலி அரசியலைத்
தாமதமே இன்றித் தகர்.

39. பொய்மைத் தலைமைகளின் போலி உரைகளினை
மெய்யென்பின் துன்பமே மேவும்.

40. பயிரதனை வேலியே பாழாக்கும் போதில்
உயிராய் அதைக்காத்தல் ஊறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

41. உள்ளமோ காஞ்சிரங் காய்யாகத் தோன்றிடினும்
கள்ளத்தார் வார்த்தை கரும்பு.

42. உள்ளமது நஞ்சாய் உதடோ நறுந்தேனாய்
உள்ளோர் உறவை உதறு.

43. குழப்பம் விளைவித்தே காணும் களிப்பின்
வழக்கத்தை வாழ்வில் விலக்கு.

44. அடுத்தோர்க்கு அல்லல் அளித்தே மகிழும்
படுமோசச் செய்கையைப் போக்கு.

45. பெற்றோரை இவ்வுலகில் பேணியே காத்திடுதல்
நற்றவத்துள் கோடியாம் நம்பு.

46. தன்னலத்தை நோக்காகத் தாங்கியோர் நட்பதனை
நன்றன்று நாளும் நவில்.

47. இறையின் அருளை இனிதே அடைய
மறைநெறியை மண்ணில் மதி.

48. சத்திய நன்நெறிக்குச் சான்றென வாழ்ந்திடுவோர்
இத்தரையின் பேறென் றியம்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

49. இறையச்ச உள்ளம் இனிதே அமையின்
கறையெண்ணம் தோன்றாதே காண்.

50. உள்ளத் துறுதியினால் உண்மை நெறிநிற்போர்
கள்ளங்கள் நாடாரே காண்.

51. வாரி வழங்காது வாழ்கின்ற செல்வரினைப்
பாரிலே ஏழையாய்ப் பார்.

52. வாய்வார்த்தை வாஞ்சை வடிவாய் அமைந்திடிலோ
பேய்யும் பணிந்திடுமே பார்.

53. அச்சம் சிறையாம் அகத்திற்கு வீரத்தில்
இச்சையாய் என்றும் இரு.

54. ஆயிரம் பேச்சதனை அப்படியே விஞ்சியதாம்
ஆயின ஓர்செயலாம் ஆய்.

55. சோம்பலாய் நன்கு சுருண்டேதான் தூங்கிடில்
கூம்பியே போகும் குடி.

56. வாழ்வின் உயர்ச்சி விதையாகும் நேரத்தை
பாழ்ஆக்கா நன்நிலையில் பேண்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

57. தன்னிதய மெல்லாம் தழுவி உனைநிறைத்த
அன்னையே உன்னுயிராம் ஆய்.

58. நீத்தவே போதித்த நல்லோரை மூழ்கடிக்க
ஏந்தும் துடுப்பை எறி.

59. கனிந்ததாம் அன்பின் கருவிடமாம் தாயைக்
கனிவாகக் காலமெலாம் கார்.

60. இறையின் கருணையை இவ்வுலகில் ஈகை
நிறைவாகச் செப்பும் நினை.

61. தர்மமே செய்யும் தக்கோர்க் கிறையுமே
தர்மத்தை நாடித் தரும்.

62. துஷ்டர்கள் வாழ்வெல்லாம் தூய்மைக்கு மாய்வேதான்
நஷ்டம் புவிக்கிவரால் நம்பு.

63. மூடனையும் நம்பிக்கை முன்னேறச் செய்வதனால்
தேடலை நன்றென்றே தேர்.

64. பொறுமை துகளாக்கும் பாறையையும் பாரில்
சிறுமையே நல்கும் சினம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

65. நன்னெறியை நாளுமே நன்றென்று பேணிடிலோ
என்றுமே வாழ்வில் எளில்.

66. வெற்றியின் தேவதை வாழ்வினிலே வாழ்த்துரைக்கப்
பற்றிப் பொறுமையைப் பேண்.

67. கல்வியே இல்லானைக் கால்நடைக் கொப்பென்று
சொல்வதால் கற்றே சிற.

68. வாழ்கின்ற காலமெலாம் வஞ்சத்தில் ஓங்கிடுவோர்
தாழ்வுற்றுப் போவரே தான்.

69. முற்றத்து மல்லிகை மாமணம் நோக்கிடார்
குற்ற மணத்தினரே கூறு.

70. அதிகாரம் கொண்டோரை அப்படியே நம்பின்
சதிக்கு இழக்காவாய் சிந்தி.

71. நல்லோர்க்குக் காலங்கள் நன்கே கனிவதில்லை
அல்லல் அணியாம் அவர்க்கு.

72. தூங்கும் இரவினிலும் துட்டர்கள் உள்ளத்தில்
தீங்கெண்ணம் தான்தோன்றும் தேர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

73. வாழ்கின்ற காலமெலாம் வஞ்சகத்தில் வாழ்வோரைப்
பாழ்க்கிணறாய் பார்க்குமே பார்.

74. இன்னுயிராய் ஈன்றோரை இப்பதியில் பேணிடிலோ
உன்னதமே கிட்டும் உணர்.

75. இடரேது தாக்கிடினும் இப்புவியில் என்றும்
திடமாய்த் தவிர்த்திடுவாய் தீது.

76. நல்லறிவு ஞானத்தால் நன்றேதான் சிந்தித்து
நல்வழியைப் பற்றி நட.

77. விருந்தோம்பி உண்ணும் வழக்கத்தில் வாழ்வோர்
பெரும்பேறு பெற்றோர் பகர்.

78. இனிமையாய்ப் பேசும் இதயத்தார் என்றும்
கனிபோல்வர் காசினிக்குக் காண்.

79. அடக்கம் பணிவை அடியொற்றி வாழின்
சுடராகும் வாழ்வுமே சிந்தி.

80. அடுத்தோர் நலனுக்கு ஆற்றும் உதவி
சுடுகாட் டிருளின் சுடர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

81. நன்றி மறவாத நற்குணத்து மாந்தர்க்கு
என்றுமே ஏற்றம் எழில்.

82. நல்நட்பைப் பேறாக நாளுமே காத்திடுவோர்
நல்லின்பம் காண்பர் நவில்.

83. இறந்திட்ட பெற்றோர் இயற்குணம் சேய்யில்
இறவாமல் தோன்றும் இயம்பு.

84. பணமது பேசுகையில் பாதகமே ஓங்கிக்
குணமது குன்றுமே கூறு.

85. புதரில் கரம்விட்டுப் பாம்பையே தூண்டும்
விதமனிதர் காண்பர் விடம்.

86. அதிஷ்டத்தின் ஆசிப்பு ஆகிட என்றும்
பதியில் முயற்சியே பாதை.

87. அதிஷ்டமும் நஷ்டமும் ஆணுக்கு ஆகும்
பதிவிரதை தானே பகர்.

88. வறுமைக்கு வாழ்விடமாய் வாழ்வில் என்றும்
பெறும்கடன் ஆகும் புரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

89. குற்றத்தின் தாய்யாய்க் குடிகொள் வறுமையது
அற்றிட நன்முயற் சாற்று.

90. வல்லமை உள்ளோரின் வார்த்தை வரவேற்பை
நல்முறையில் காணும் நவில்.

91. ஒழுக்க விழுமியங்கள் ஓங்கிடவே வாழ்வில்
பழக்கத்தைச் சீராகப் பேண்.

92. கடலலையும் காலமும் காத்திரா யார்க்கும்
நடத்தையில் நேரம்பேண் நன்கு.

93. கருமைகள் வெண்மையாய்க் காட்சிதரா தீயோர்
திருவாளர் ஆகார் தெரி.

94. தோல்வியில் கற்கும் தகுபாடம் மேன்மைக்குக்
கால்கோலாய் ஆகிடுமே காண்.

95. ஆடை அணியால் அகத்து அழுக்காற்றின்
வாடைதான் போமோ விளம்பு.

96. நற்கருத்தை யார்நா நவின்றிடினும் நன்றென்றே
பற்றுகிற பண்பதனைப் பற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

97. குருடர்தம் ஊரில் குபேரன் ஆனோன்
ஒரு கண்ணன் தானே உணர்.

98. காதலிலே கண்டுண்ட காளையர்கள் தம்செய்கை
நீதமே என்பர் நிதம்.

99. வஞ்சக நட்பதுவோ வேண்டாம் வெளிப்படை
நெஞ்சகச் சத்துரு நன்று.

100. பெருவெற்றி போரில் பெறுவதிலும் பாரில்
கருவாகி நல்லமைதி கார்.

101. கல்வியில்த் தாகம் கனசெல்வம் இவ்விரண்டும்
நல்முறையில் ஒன்றாகா நம்பு.

102. கெட்டோரைச் சேரும் கனபுகழால் மேலுமே
கெட்டோராய் ஆவரவர் காண்.

103. மன்னித்தல் மண்ணுலகில் மேலாம் பழிவாங்கல்
என்பதனை என்றுமே எண்ணு.

104. வேதனையே வாழ்வினை வாட்டி வதைத்திடினும்
பூதலத்தில் நற்பொறுமை பேண்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

105. கொடுமையை மாய்க்கக் கொதித்தெழும் மாந்தர்
விடுதலையின் சான்றாம் விளம்பு.

106. தீராத நோய்யாத் திகழும் பொறாமை
வாராமல் காத்தே வாழ்.

107. விருந்தோம்பல் பண்பினிலே வாஞ்சையாய் வாழ்வோர்
பெரும்பேறு பெற்றோரே பார்.

108. மனிதம் மலர்கின்ற மண்ணகத்துத் தோப்பாய்
கனிந்தநற் சிந்தைய்யைக் காண்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெண்பா (நேரிசை) (இரு விகற்பம்)

01) புலவர்க்கும் வெண்பா புலியேதான் ஆகும்
துலங்காது ஓர்பிழையும் தூய்மை – நலன்கள்
பொருந்தியென் வெண்பாக்கள் பேர்பெற்றே யோங்க
அருளோன் இறையே அருள்.

02) வங்கக் கடலாக வந்துதமிழ் என்னிடத்தே
தங்கிக் கவிப்பெருக்காய்த் தானோங்கிப் - பொங்கும்
புகழுடனே என்றும் புவிதிகழ எந்தன்
அகமுணர்ந்த நாயனே ஆசி.

03) அறநெறிகள் யாவும் அழகுடனே என்றும்
சிறப்புற்றென் பாவில் செழிக்க - இறவாப்
புகழின் இறையேயுன் பேரருளால் எந்தன்
அகத்தைத் தமிழூற்றாய் ஆக்கு

04) என்பாவில் எப்பிழையும் என்றுமே நேராமல்
நன்றாய் அமைந்திட நாயனே – என்நாவும்
சொல்லின் பெரிதோர் சுனையென்றே ஆவதற்கு
நல்லருளை நாளுமே நல்கு.

05) வேசங்கள் போட்டு வெளித்தோற்றப் பார்வைக்கு
நேசரே போன்று நடித்துவாழ் - நீசர்
தொடர்பினை நன்றெனத் தேர்ந்திடில் என்றும்
இடராகு மென்றே இயம்பு.

06) புன்னகை பூத்தும் புனிதர்போல் பேசியும்
நன்முறையாய் நாளும் நடித்திடும் - தன்மைகள்
கொண்டோர் உறவைக் குவலயத்தில் நாடிடில்
மாண்டேதான் போகும் மகிழ்வு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07) ஊரார் முரசு உயர்வே எனஉரைத்துச்
சீராய்த்தன் பல்லின் சிறப்பினைப் - பாராமல்
மாற்றாரைப் போற்றியே மண்ணுறவைத் தூற்றிடின்
ஏற்றமே எட்டா எமக்கு.

08) பஞ்சமா பாதகத்தின் பாசறை என்றேதம்
நெஞ்சத்தை ஆக்கிட்ட நீசர்தம் - வஞ்சங்கள்
வாழ்ந்ததாய் எங்கும் வரலா றிலையாமே
தாழ்ந்தழிந்து போம்இவை தான்.

09) அற்ப சலுகைக்காய் ஆகா இனப்பூசல்
தொற்ற வகைசெய்யும் தீச்செயலைப் - பற்றாமல்
ஒற்றுமையே நாட்டில் உயர்வாக ஓங்குவதற்கு
பற்றுடனே செய்வாய் பணி.

10) சத்தியத்தின் சான்றாயச் சிறப்புறவே தம்வாழ்வை
நித்தமுமே ஆக்க நினைக்கின்ற – உத்தமர்கள்
எத்தனை இன்னல் எதிர்கொண்டு தாக்கிடினும்
அத்தனையும் தாங்கிடுவர் ஆய்.

11) மற்றோர் இடரில் மகிழ்ச்சியே காண்கின்ற
குற்றக் குணத்தைக் குவலயத்தில் - பற்றாமல்
ஏற்றத்தை எல்லோர்க்கும் என்றும் நினைக்கின்ற
போற்றும் நிலைதன்னைப் பேண்.

12) கட்டிய தாரக் கனிமொழியில் கட்டுண்டு
கிட்டிய தன்னுறவைக் கேடென்றே – விட்டொதுக்கி
வாழ்வதுவும் பூவுலகில் வாழ்வாமோ அவ்வாழ்வு
பாழ்க்கிணறு போலென்றே பேசு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13) கண்ணே மணியே கனிரசமே என்றெல்லாம்
மண்ணில் உனையென்றும் மேன்மையின் - எண்ணமாய்ச்
சீராய் வளர்த்த சிறப்புறு அன்னைக்கு
வேராய் இருந்தென்றும் வாழ்.

14) தீங்கில் திழைக்கின்ற தீயோர் தரணியிலே
பாங்குடை மாந்தர் புகழதனைத் - தாங்கிடவே
மாட்டாமல் தூற்றி மகிழ்ந்திடினும் நல்லார்க்கு
நாட்டினில் நற்புகழே நம்பு.

15) வஞ்சக உள்ள வடிவென்றே வாழ்கின்ற
நெஞ்சத்து மாந்தர்தம் நல்லுறவை – நெஞ்சத்தை
விட்டேதான் நீக்கிடில் வாழ்வதுவும் இன்பத்தில்
கட்டுண்டு போகுமே காண்.

16) வஞ்சகமே செய்யும் வழமை நிறைந்திட்ட
நெஞ்சக உள்ளத்தின் நீசரைநாம் - நஞ்சாய்க்
கருதி விலக்கிடிலோ கிட்டுமே நன்மை
பெருமிடரும் பற்றாதே பார்.

17) வாழ்கின்ற காலம் வையச் சுமையாகித்
தாழ்வுற்றுத் தீங்கில் திழைத்திடுவோர் - வீழ்தல்
நடுவூர் நிலைத்திட்ட நச்சுமரம் ஒன்று
நெடுநிலத்தில் வீழ்தல் நிகர்.

18) தன்வீட்டு மல்லிகையில் தாவிவரும் வாசத்தை
நன்றே நுகராத நம்மோர்கள் - இன்று
நெடுந்தூர வாசத்தை நாடல் புவியில்
படுமோசச் செய்கையே பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19) கோடியாய் செல்வம் குவலயத்தே பெற்றிருந்தும்
நாடி உறவார்க்கு நல்காமல் - கேடினிலே
வாழ்வதுவும் வாழ்வாமோ வீண்வாழ்வே இந்நோர்கள்
பாழ்க்கிணறு போல்வர் பகர்.

20) சட்டம் தமக்கேதான் சாதகமாய் உள்ளதனால்
திட்டமுடன் மற்றோர் திருப்பொருளைத் - தட்டி
எடுப்பதற்கு என்றுமே எத்தனிக்க வேண்டாம்
நடுசொல்லும் நாயகனை நம்பு.

21) சேர்ந்து பழகும் சனங்களெலாம் நட்பென்று
தேர்ந்திடவே வேண்டாம் தெளிவாக – யார்எவர்கள்
எத்தன்மை கொண்டோர் எனத்தேர்ந்தே தோழமைக்கு
வித்திட்டு வாழ்தல் விரும்பு.

22) வாரி வழங்காது வாழ்கின்ற செல்வனவன்
பாரில் பெரியதோர் பாவியே – பாரியின்
வாழ்வு புரியாமல் வாழும் இவர்க்கென்றும்
தாழ்வுதான் வந்திடுமே தேடி.

23) முட்டாள் முழுவாழ்வும் மூதறிஞன் நாளொன்றை
எட்டாது என்பதனை எண்ணியே – கட்டாயம்
ஆனதுதான் கல்வியென ஆய்தறிந்து கற்றேநீ
ஆனசிறப் பெல்லாம் அடை.

24) அறியாத மக்கள் அகத்துணர்ச்சி தூண்டி
நெறியற்ற ஆட்சியலில் நன்கே – குறியாகி
வாசிகளின் பக்கமே வாலாட்டும் போக்கதனை
ஏசியே என்றும் எதிர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25) தாரம் மகவுதனைக் கண்ட பின்னாலே
பாரமாய்த் தாய்யைநீ பார்க்காதே – பாரதனில்
அன்னைக்கு ஆனநிகர் ஆதொன்றும் இல்லையே
என்பதனை உள்ளத்தில் எடு.

26) பொன்னும் மணியும் பெருவாழ்வும் பூவுலகில்
பென்னம் பெரிதாம் பதவிகளும் - நன்றே
உனக்குக் கிடைத்திடினும் உன்தாய்க் கிவைகள்
கனத்தில் கடுகளவே காண்.

27) ஊரின் உயர்ச்சியை உரியதம் மேன்மையைப்
பாரில் அரசியலின் போராலே – தாரையே
வார்த்துச் சிறுமையில் வாழ்ந்திடும் கூட்டத்தார்
ஓர்நாளும் காணார் உயர்வு.

28) வேதமாய் ஆட்சியலை வாதித்து வாழ்வோர்கள்
பாதக மாம்நிலையைப் பற்றிடுவர் - பூதலத்தில்
உயர்ச்சி தனையும் உரித்தாய்ப் பெறார்
நியதி இதுதானே நம்பு.

29) பொல்லார் மகிழ்வாய் புலரும் தலைமைகள்
பல்லாண்டு காலம் பதியினில் - நில்லாதே
மாய்ந்து மடிவதுதான் மண்ணின் நியதியாம்
ஆய்ந்தே அனைத்தும் அறி.

30) தனதாம் நிலைமறந்து தற்பெருமை கொண்ட
சனங்கள் புவியில் சிறந்து – கனகாலம்
வாழ்ந்த கதைகள் வரலாற்றில் இல்லையே
தாழ்வை அடைந்தனரே தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31) அதிகாரம் மிக்கோர் அடிவருடி ஆகிப்
பதியில் உயர்ந்தோராய்ப் போலித் - துதிகொள்வோர்
மண்ணுலகில் என்றும் மகிமைதான் காணாரே
புண்போல்வர் இன்னோர் புவிக்கு.

32) நல்லுள்ள மாந்தர்க்கு நாசம் விளைவித்து
அல்லலிலே அன்னோரை ஆட்படுத்தி – நல்லின்பம்
பெற்றிடுவோர் பூபதிக்குப் பேய்போல்வர் ஆதலினால்
மற்றோர் மகிழ்வில் மகிழ்.

33) ஆற்றல் நிறைந்த அருந்திறமை மாந்தர்க்கு
ஏற்றவிட மிங்கே எதிலுமில்லை – ஏற்றத்தின்
நற்பதவி எல்லாமும் நாச நரர்க்கென்றே
தொற்றிட்ட இந்நிலையைத் தூசி.

34) வாழ்கின்ற காலமெலாம் வாய்மை நெறிபிறழ்ந்து
கீழ்நிலைக் காரியத்தில் கோலமுடன் மூழ்கிக்
கிடக்கின்ற மானிடர்கள் காசினிக்கு என்றும்
விடம்போல்வர் தானே விளம்பு.

35) வறுமையே வந்துன்றன் வாழ்வினை வாட்டிச்
சிறுமையே நல்கும் சமயம் - பொறுமையாய்
ஏற்றே முகங்கொடுப்பின் என்றுமே உன்றனுக்கு
ஏற்றமே வந்திடுமென் றெண்.

36) நல்லோரைத் துன்பங்கள் நாளும் வதைத்திடினும்
பொல்லாங்கு யார்க்கும் புரியாரே – நல்லதையே
நாடிடுவர் மற்றோர்க்கும் நன்மையே செய்திடுவர்
கூடி இவருறவைக் கார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37) பயிரதனை வேலியே பாழாக்கும் போதில்
உயிரென்றே பயிரை உவந்து – துயில்துறந்து
காக்க முனைகின்ற காரியத்தில் ஏதுபயன்
ஆக்கமிலாச் செய்கை அறு.

38) உள்ளம் கசப்பின் உருவாய் இருக்கையிலே
கள்ளமாம் பேச்சைக் கனிரசமாய் - அள்ளியே
வீசும் மனிதர்தம் வாசத்தை என்றுமே
தூசுவாய் எண்ணித் துற.

39) தன்மனையைப் பூவுலகாய்த் தான்எண்ணி வாழ்கின்ற
சின்ன மதிகொண்ட சிந்தையோர் - நன்கே
பதியின் நடத்தை புரியாமல் வாழ்ந்து
கதியற்றுப் போவரே காண்.

40) பாமரரை ஏமாற்றும் போலி அரசியலைத்
தாமதமே இன்றித் தகர்த்ததனை – நாமமதும்
இல்லாமல் நானிலத்தில் நாசமுறச் செய்தல்
நல்ல பணியாம் நரர்க்கு.

41) கல்லும் கனிந்து கனிரசமாய்க் காணுமே
நல்முயற்சி செய்யும் நரர்க்கேதான் - பொல்லா
வறுமையும் பேரிடரும் வாட்டி வதைக்கும்
சுறுசுறுப்பு விட்டோர்க்கே செப்பு.

42) தாழ்நிலையைத் தானடையின் தாரணியும் நன்குனை
வீழ்என்றே தூற்றும் வியப்பில்லை – வாழ்வினிலே
ஏற்றமே வந்துன்னை என்றும் அணிசெய்ய
ஆற்றலுடன் ஆனபணி யாற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

43) அன்பான வார்த்தை அழகுடனே வாய்வந்தால்
இன்பமே உந்தனிலே இப்புவியில் - நின்றிலங்கும்
ஆதலால்ப் பாங்காக ஆருடனும் பேசுவதை
வேத விதியாய் விளம்பு.

44) மனிதர்க்கு வாழ்வில் மகிமைப் பொறுமை
இனிதே அமையின் இடரும் - கனிபோன்று
இன்பமே நல்கும் இகத்தினது வாழ்வுமே
புன்னகையாய் ஆகும் புரி.

45) அதிகாரம் கூடின் அகந்தையே ஓங்கிச்
சதிகளிலே சஞ்சரிக்கச் செய்யும் - பதியில்
அடக்கத்தைக் கைக்கொள்ளின் ஆன சிறப்பின்
இடமென்றே யாவாய் இயம்பு.

46) நல்லோர்க்கு நாசங்கள் நாளுமே சூழ்ந்திடினும்
நல்லோர்கள் நல்லோரே நானிலத்தில் - பொல்லாங்கை
நாடிடவும் மாட்டார்கள் நன்மையே செய்திடுவர்
தேடி இவருறவைத் தேர்.

47) அதிகார ஆணவத்து ஆகாச் செயல்கள்
கதியாக மாய்ந்த கனத்த - இதிகாசம்
மண்ணில் உளதை மனதில் நினைத்தேதான்
கண்ணியமாம் நல்லடக்கம் கார்.

48) எத்தகைய இன்னல் எதிராக வந்திடினும்
அத்தனையும் தாங்கும் அகத்துடனே - இத்தரையில்
சத்தியத்தில் சங்கமிக்கும் சான்றோர் அனைவரும்
உத்தமத்தின் சான்றென் றுரை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

49) உலகேது சொன்னாலும் ஓர்போதும் தீயோர்
விலகாமல் தீங்கில்த்தான் வாழ்வர் - சிலகாலம்
சென்றபின்னே நாயகனும் சொல்தீர்வு நாடுகையில்
அன்னோர் நிலையாதாம் ஆய்.

50) இன்பத்தில் நன்கே இணைந்திருந்து பின்னாலே
துன்பத்தில் தூரத் துலங்கிடுவோர் - அன்பரோ
தன்னலத்தின் சான்றாய்த் திகழும் இவருறவு
நன்றன்றே நாளும் நவில்.

51) தன்மகன் வாழ்வுக்குத் தன்னிதயம் மற்றும்தன்
இன்னுயிரைக் கூடவும் ஈந்திடு – தன்மையைத்
தன்குண மென்றேதான் தாங்கிட்ட தாய்யவள்
நன்றாம் கொடையே நமக்கு.

52) உன்துயரைக் கண்டு உலகமே கண்ணீரை
அன்பால் வடித்து அழுதிடினும் - தன்பாசம்
காரணமாய்த் தாய்சிந்தும் கண்ணீரே தான்புவியில்
பாரம் மிகைத்தாம் புரி.

53) இருக்கும் உணவதனை இன்பமுடன் சேய்க்கு
அருந்தக் கொடுத்து அகமே – திருப்தி
அடைகின்ற தன்மை அகிலத்தில் தாய்க்கே
உடைமையா மென்றே யுணர்.

54) தூங்கும் பொழுதினிலும் தூய்மையுடன் சேய்பற்றி
ஏங்கித் தவிக்கும் எழிலாம்தாய்ப் - பாங்கதனை
எப்படிப் புகழ்ந்தாலும் ஏற்றஈ டாகாதே
இப்புவியின் சொர்க்கம் இவள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

55) அன்னையைக் காணின் அகத்தினிலே அப்போதில்
உன்னதமாம் சொர்க்கம் உணர்கின்ற – தன்மைதான்
தோன்றுமே நற்தனயர்க் காதலினால் என்றுமே
ஈன்றோளை உள்ளத் திருத்து.

56) தன்மகட்கு ஈயொன்று தீண்டிடினும் தாங்கிடாத்
தன்மை நிறைந்திட்ட தாய்மையின் - உன்னதத்தை
எண்ணி அவளுக்கு என்றும் உயரிடத்தை
மண்ணுலகில் ஈந்தே மகிழ்.

57) தன்னுயிரே என்று தரணியிலே சேய்களினை
அன்னையர்கள் காக்கும் அழகேபோல் - நன்முறையில்
பெற்றவளைப் பேணல் பதியில் தனயர்க்கு
உற்ற கடனாம் உணர்.

58) மனைவி மகவு மகிழ்வினிலே மூழ்கி
உனையுமே பெற்ற உயிரை – நினைக்காத
வாழ்வா லுலகில் வளமுன்டோ உந்தனுக்குத்
தாழ்மை வருமே தெரி.

59) உலகின் பொருளெல்லாம் உன்னுடைமை யாகிப்
பலகோடி மாந்தர் புவியில் - நலம்நல்க
உந்தனுக்கு வாய்ந்திடினும் உண்மையிலே தாய்க்கிவை
எந்தவகை ஈடுமில்லை எண்ணு.

60) பிறந்த திருநாட்டைப் போற்றியே வாழ்தல்
சிறப்பாம் உயிருடன் செல்வம் - துறந்தேனும்
தாய்நாடு காத்தல் தனிச்சிறப் பாகுமே
ஆய்ந்தேதான் நாட்டை ஆசி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

61) பெற்றெடுத்த தாய்க்குப் பகரமாய்த் தாய்நாட்டைப்
பற்றுடனே என்றுமே பேணிடுவாய் - நற்றவம்
போன்றதாம் நாட்டினைப் போற்றும் பணியென்ற
ஆன்றோ ருரையும் அறி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடியல் புலரட்டும்

இலக்கியத் தோப்பில் எந்தனது
இனிய கவிதைத் தருக்களிலே
நலமே எழுச்சிப் புஷ்பங்கள்
நாளும் நன்கே பூக்கட்டும்.

மானிட மேன்மைக் குடியேற்றம்
மாண்பாய் மண்ணில் மலர்வதற்கு
ஆன எந்தன் கவிக்கரைகள்
அருமை இடமாய்த் திகழட்டும்

கரையே காணாக் கடலினிலே
கலங்கரை விளக்கென என்கவிதை
நிறைவாய் மானுட ஓடமது
நன்னெறி காண உதவட்டும்.

மண்ணில் எந்தன் கவிமேகம்
மனிதப் பயிரின் மேன்மைக்கு
நன்றே செழுமைப் பெருமழையாய்
நாளும் இங்கே பொழியட்டும்

புனிதர் என்றே நடிக்கின்ற
போலி வேசப் புல்லர்களை
இனிதே பொசுக்கும் அனலாக
இங்கே என்கவி ஆகட்டும்.

எந்தன் கவிதை வானத்தின்
ஏற்ற கருத்துத் தன்மதியும்
தந்திடு எழுச்சிச் சுடரினிலே
தரணியில் விடியல் புலரட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூதூர் கங்கைக் கடல்

வற்றா வளநதி மாவலியும்
வளைந்தே ஓடி வனப்புடனே
முற்றாய் முடியும் கங்கையெனும்
மூதூர் கடலைக் காண்போமே!

மாவலி கங்கைக் கலப்பிடத்தை
மாலைப் பொழுதின் மகிழ்வினிலே
ஆவல் மிகைத்தே காண்பதற்கு
ஆங்கே மக்கள் திரண்டிடுவர்.

கங்கை கலக்கும் கடலருகே
கனத்த மீன்கள் குவிவதனால்
எங்கும் மீனவ ஓடங்கள்
எழிலாய் என்றும் தெரிந்திடுமே!

கடலின் அருகே புங்கைமரம்
கனத்த நிழலை வழங்கிவர
உடலைக் கடலின் தென்றலதும்
ஒன்றித் தழுவிச் சுகம்சேர்க்கும்

அடம்பன் கொடியும் மலர்ந்தங்கே
அழகின் அழகாய்ப் படர்ந்திருக்க
கடலின் அலையும் கரைதழுவிக்
களிப்பே கொள்ளச் செய்திடுமே!

கற்பகத் தருவாம் பனைமரமும்
காணும் திசைதனில் காட்சிதர
வற்றா தோடும் மாவலியும்
வளமே மூதூர்க் களிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருகே உள்ள காடதனில்
ஆனையும் வேறு விலங்குகளும்
நிறைந்து நிற்கக் கண்டிடலாம்
நித்தம் பார்த்து மகிழ்ந்திடலாம்

கங்கைக் கடலின் பரப்பினிலே
கொடிய முதலைகள் வாழ்வதனால்
அங்கே நீந்திக் குளிப்பதற்கு
அச்சம் மாந்தர் கொண்டிடுவர்.

இயற்கை எளிலே நிறைந்திட்ட
இனிய கங்கைக் கடற்கரையோ
வியப்பின் வியப்பாய் இருக்கிறதே!
வையக வனப்பாய்த் தெரிகிறதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மடமைத் தனத்தின் மகுடம்

எங்கள் கரத்தால் எம்கண்ணை
ஏனோ நாமும் குத்துகிறோம்
அங்கக் குறைகள் கொண்டோராய்
ஆகி அவலம் அடைகின்றோம்

உண்மை என்று தெரிந்திருந்தும்
ஊமை யாக இருக்கின்றோம்
மண்ணில் இந்த மடமையினால்
மகிமை இழந்து போகின்றோம்.

நாக்கிலிப் புழுவை நற்பாம்பாய்
நன்கே விளக்கம் கொடுக்கின்றோம்
தாக்கும் பகையை நற்பென்று
தர்க்கம் செய்தே அழிகின்றோம்.

உண்மைத் தன்மை நிறைந்திட்ட
உத்தமர் தம்மை வெறுக்கின்றோம்
தின்மை நிறைந்த துஷ்டர்களைத்
தலைமை என்றே தொடர்கின்றோம்.

எவரோ யாரோ எதுசொல்லின்
ஏற்றம் என்றே ஏற்கின்றோம்
தவறாம் முடிவால் வாழ்வினிலே
தாழ்மை நிலையில்த் திழைக்கின்றோம்.

மடமைத் தனத்தின் மகுடமென
மண்ணில் நாமும் ஆகியதால்
அடிமை நிலைக்கு உரியோராய்
ஆகிக் கண்ணீர் வடிக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றம் என்று ஏதுமின்றி
ஏழ்மை நிலையின் வாரிசென
தோற்றம் பெற்றுத் திகழ்கின்றோம்
தொடராய்ச் சோகம் அடைகின்றோம்.

நல்லோர் பெரியோர் தலைமைதர
நாடி நன்கே வருகையிலே
பொல்லார் சதிக்கு ஆட்பட்டுப்
பொங்கி எழுந்தே விரட்டுகிறோம்.

பணமே பணமே பணமென்று
போலி வேசம் போட்டிங்கே
குணத்தின் குன்றாய் நடிப்போர்க்குக்
கண்ணியம் கொடுத்தே உயர்த்துகிறோம்

உணர்ச்சி தன்னின் அடிமையென
ஓங்கி நாளும் திழைக்கின்றோம்
கனத்தில் உயரிய சிந்தைதனைக்
கணக்கே இன்றித் துறந்துள்ளோம்

எங்கள் விதியை நாமின்று
ஏற்றம் இலதாய் எழுதியுளோம்
பொங்கும் அறிவு ஞானத்தால்
புதிய விதியை படைப்போமே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையின் தீர்ப்பு வந்திடுமே!

இறையின் தீர்ப்பு வந்திடுமே
இன்னல் இழைப்பதைத் தவிர்ப்பாயா?
கறைகள் கொண்ட செயலெல்லாம்
கடிதில் நீயும் விடுவாயா?

புனிதன் என்றே நன்றாகப்
போலிக் கோலம் போட்டாயே!
இனியும் இந்தக் கோலமெலாம்
இல்லா நிலையில் வாழ்வாயா?

கொடுமை நிலைத்த வரலாறு
குவலய மீதில் கிடையாதே!
நடித்தது போதும் உணர்ந்துவிடு
நல்லோன் என்றே மாறிவிடு.

நீயும் செய்யும் செயலெல்லாம்
நாயன் பார்ப்பது மறவாதே!
காயம் உன்னால் கண்டோர்கள்
கண்ணீர் வாடிப்பதைப் புரிந்துவிடு.

உண்மை உறங்கும் ஆனாலும்
ஒடிந்து முற்றாய் மாயாதே!
திண்ண மாக ஓர்நாளில்
தழைத்து ஓங்கும் மறவாதே!

இனிமேல் நீயும் இப்புவியில்
இழிந்த செயலில் இறங்காதே!
புனிதன் என்ற வேசத்தைப்
போடும் செயலில் நிலையாதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமக்கோர் தலைமை வரும்

நமக்கோர் தலைமை நாளைவரும்
நம்குறை யாவும் நீங்கிவிடும்
எமது வாழ்வை வசந்தமது
ஏற்றம் என்றே அணிசெய்யும்

வறுமை இல்லா நிலைஓங்கும்
வாழ்வோ வனப்பின் வடிவாகும்
வெறுமை கொண்ட தலைமையெலாம்
வெருண்டு எங்கோ ஓழிந்தோடும்

விடுதலை எமக்குக் கிட்டிவிடும்
வீணாம் தொல்லை அகன்றுவிடும்
அடிமைத் தனங்கள் அகன்றுவிடும்
அமைதி நன்றாய் அரசோட்சும்.

நிறைவே வாழ்வில் நிலைகொள்ளும்
நிம்மதி நித்தம் செழித்தோங்கும்
குறையே இல்லா வாழ்வதனால்
குதுகலம் எம்மை ஆட்கொள்ளும்.

புனிதம் புவியில் தழைத்தோங்கும்
போலிகள் யாவும் பொசுங்கிவிடும்
இனிய சிந்தை இனிதோங்கும்
இன்பம் எங்கள் இருப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மையே உயர்வு கண்டது

துரோகம் என்னைச் சூழ்ந்தது.
துன்பமே துணையாய் ஆனது
வரவுகளும் வறுமை கண்டது
வாழ்க்கையோ இடராய்ப் போனது

கண்டிட்ட கனவும் கலைந்தது
காலமுமே பகையாய்ப் புலர்ந்தது
அண்டிட்ட உறவும் அகன்றது
அல்லலே அதிகம் வந்தது

உள்ளமோ உடைந்து போனது
உண்மைகள் உறக்கம் கொண்டது
கள்ளமோ களிப்புக் கண்டது
கருணையும் எங்கோ ஒழிந்தது.

இதயமோ இரும்பாய் ஆனது
இறையோனும் பார்ப்பதைப் பகன்றது
எதையுமே தாங்கிடப் பணித்தது
ஏற்றமே வந்திடு மென்றது.

இயற்கையின் நியதி வந்தது
இன்னல்கள் யாவும் தீர்ந்தது
உயர்ச்சியே உரித்தாய் ஆனது
உண்மையே உயர்வு கண்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுயுகம் புலர்ந்திடுமே!

மலரும் மணமாய் மலர்ந்த இனவுறவில்
மாற்றம் வந்தது மண்ணில் எதனாலோ!
புலரின் உண்மை புல்லர் வாழ்வெல்லாம்
பொசுங்கிப் போகும் புவியில் புரிவீரோ!

சத்திய மோங்கிச் செழித்த இனங்களிடை
சதிகள் வந்து சங்கம மாகிடவே
நித்தம் முயலும் நீசர் கூட்டங்கள்
நிலத்தில் நலமாய் நிலைத்திட முடியாதே!

அமைதி உருவாம் அருமைத் தாய்நாடு
அவலம் சூழ்ந்து அழிவில்த் திழைப்பதற்கு
சமைத்த தீயோர் சதிகள் அத்தனையும்
சீக்கிர மாகச் சரிந்திடும் சத்தியமே!

குழப்பம் செய்து குளிரே காய்கின்ற
குள்ளர் கூட்டக் குவலய வாழ்வுக்கு
வழக்க மென்றெ வந்திடு மிறைதீர்ப்பு
விரையா திருப்பினும் வந்திடு மறிவீரே!

நல்லோர் பெரியோர் நன்னெறி நிலையெல்லாம்
நன்கே நம்மிடை நலிந்து போயிடினும்
பொல்லார் தலைமை பெரிதாய் ஓங்கிடினும்
பெரியோன் தீர்ப்பில் புதுயுகம் புலர்ந்திடுமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புரிகிறதா?

மனிதர் உள்ளம் புரிகிறதா?
மறைந்த வஞ்சம் புலர்கிறதா?
இனிதே பேசி வஞ்சிக்கும்
இதயம் இருப்பது தெரிகிறதா?
கனிந்த நல்ல வார்த்தைகளில்
கள்ளம் பொதிந்தது புரிகிறதா?
புனிதன் என்ற போர்வைக்குள்
புலரும் கொடுமை தெரிகிறதா?

நண்பர் போன்று பழகியே
நாசம் செய்வது தெரிகிறதா?
துன்பம் இழைத்தே இன்பமுறும்
துட்டர் இவரெனப் புரிகிறதா?
நன்மை புரியும் வேசமிட்ட
நச்சுப் பாம்பிவர் தெரிகிறதா?
தின்மை பிறர்க்குப் புரிவதிலே
தீரரும் இவரெனப் புரிகிறதா?

அடுத்தோர் துயரில் அகமகிழும்
அரக்கர் இவர்கள் தெரிகிறதா?
கெடுதல் செய்தே காலத்தைக்
கடத்தும் மாந்தர் புரிகிறதா?
நெடுநில வாழ்வின் நீசரென
நம்மிடை வாழ்வோர் புரிகிறதா?
அடுக்காச் செயல்கள் அனைத்திற்கும்
அடிப்படை இவர்கள் தெரிகிறதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறப்பின் தமது நோக்கெல்லாம்
புரிதல் பிறர்க்குத் தீங்கென்ற
நெறியைத் தமதாய்க் கொண்டோர்கள்
நம்மிடை உலவுதல் தெரிகிறதா?
கறையே வாழ்வின் கருத்தென்று
காலம் பூராய் வாழ்கின்ற
நிறையப் பேர்கள் நிலத்தினிலே
நிறைந்தே இருப்பது புரிகிறதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலட்சிய மாந்தன் எழுத்தாளன்

மனித இனத்தின் மேன்மைக்காய்
மனதில் தாவும் உணர்வுகளை
இனிதே எழுத்தில் வடிக்கின்ற
இலட்சிய மாந்தன் எழுத்தாளன்
கனிந்த நல்ல கருத்துரையைக்
காலம் பூராய்க் கவிகதையாய்
இனிதே அவனும் அளித்தாலும்
இன்னல் தானே அவன்வாழ்வு

எழுதும் அவனின் எழுத்ததனால்
ஏற்றம் மனிதம் கண்டிடினும்
தழுவும் அவனின் வறுமையதோ
தள்ளிப் போகா திருக்கிறதே
பொழுதும் புலரும் வேளையிலும்
பொல்லா இருளின் பொழுதினிலும்
தழுவும் வறுமை அவனுடைமை
தானே என்று ஆகிறதே!

அவனின் ஆக்கம் எல்லாமும்
அச்சில் நூலாய் ஆவதற்குக்
கவலை கொண்டு உள்ளானே
காசுக் கஷ்டம் உள்ளதனால்
புவனம் மீதில் அவனுக்கு
புன்னகைப் பொழுது கிடையாதே!
கவனம் யாவும் எழுத்தென்றே
காலம் கடத்தி வாழ்கின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பச் சுமையும் கூடிவரக்
கொடுமை வறுமை வாட்டிவரப்
படுக்கும் பாயும் பகையாகப்
பாவம் அந்த எழுத்தாளன்
எடுக்கும் அவனின் தொழில்முயற்சி
எல்லாம் வறுமை வடிவம்தான்
நெடுக அவனின் வாழ்வினிலே
நீடிய வறுமை தோழமைதான்

உயரிய கருத்தை உலவவிடும்
உன்னத உருவாம் எழுத்தாளன்
உயர வாழ்வில் வழியின்றி
உருகிக் கண்ணீர் வடிக்கின்றான்
இயம்ப முடியா நிலையினிலே
இகத்தில் அவனின் வாழ்வாச்சு
துயரம் துன்பம் இவைதானே
தூய வடிவம் அவனுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவின் சுடரே

அறிவின் சுடரே! அற்புதமே!
அறியா இருளின் அழிவிடமே!
சிறப்பின் தொழிலின் திருவிடமே!
சிந்தைத் தெளிவின் கருவிடமே!

அறிவின் தீபம் என்றிந்த
அவணி மீதில் மிளிர்கின்ற
பெருமைக்குரிய ஆசான்கள்
புவியின் பெரிய பேறாகும்

கல்விக் கடலில் மாணவர்க்குக்
கலங்கரை விளக்காய் ஆனோரே
நல்ல குருவாய்க் குவலயத்தில்
நற்பணி நாளும் புரிவோரே!

உங்கள் பணிகள் இவ்வுலகை
உயர்வு காணச் செய்கிறதே!
தங்கத் தரத்துச் சேவையெனத்
தரணி இதனைத் துதிக்கிறதே!

வறுமை வாழ்வின் பிடியினிலும்
வளமே இல்லா நிலையினிலும்
பெருமை என்றே போதித்துப்
பெரிதும் மகிழ்வு காண்போரே!

பதியின் கொடைகள் நீங்களெனப்
பகன்றால் மிகையும் ஆகாதே!
அதிக தியா கமத்தனையும்
ஆறாய் உங்களி லோடுறதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவே உங்கள் மகிமைக்குக்
குவலய மீதில் ஈடில்லை
சிறப்பின் சிறப்பு நீங்கள்தான்
சிந்தை இதைத்தான் சொல்கிறதே

ஏதும் அறியா மாணவரை
ஏற்ற அறிவின் தாரகையாய்ப்
பூதல மீதில் உருவாக்கிப்
பூரிப் படையும் புனிதர்கள்

ஈன்ற சேயாய் மாணவரை
இதயத் தாலே உவந்தேற்று
சான்றோன் ஆக்கப் பாடுபடும்
சரித்திர புருஷர் நீங்கள்தான்

புவியும் உள்ள காலமெலாம்
புனிதம் என்றே இப்பணியை
நவின்று நன்கு மகிழ்ந்திடுமே!
நீங்காப் புகழைத் தந்திடுமே!

நல்ல குருநா தர்களாய்
நானில மீதில் மிளிர்கின்ற
எல்லோர் வாழ்வும் ஏற்றமுற
ஏகன் இறையே அருள்செய்வாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய ஆண்டே! புத்தெழிலே!

(2013ம் ஆண்டின் வருகைக்காக
எழுதப்பட்டது)

புதிய ஆண்டே! புத்தெழிலே!
புவியில் பூக்கும் புன்னகையே!
பதியில் மகிழ்வின் புலர்விற்குப்
பாதை நீயும் ஆகாயோ!

உந்தன் வரவு உலகத்தின்
உன்னத மென்றே ஆகட்டும்
எந்த இடரும் அனுகாமல்
ஏற்றம் எமக்கு நல்கட்டும்

புதிய வருடப் பிறப்பினிலே
புதுமை புவியில் சிறக்கட்டும்
கதியே இன்றி வாழ்வோர்க்குக்
களிப்பின் கருவறை ஆகட்டும்

வாட்டும் வறுமைப் பிணியதனை
விரட்டும் வழியாய் விளங்கட்டும்
நாட்டின் நல்ல அமைதிக்கு
நன்றே வழியைக் காட்டட்டும்

இனத்தின் பெயரால் பிரிகின்ற
இழிந்த செயலின் புதைகுழியாய்
குணத்தின் குன்றுச் சான்றிடமாய்க்
குவலய மீதில் அமையட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றுமை ஓங்கி நாட்டினிலே
ஒழுக்கம் உயர்ச்சி காண்பதற்கு
ஏற்ற நெறியைக் காட்டட்டும்
எளிளின் வடிவம் ஆகட்டும்

மனிதத் தன்மை மேலோங்க
மேலாம் நெறியைக் காட்டட்டும்
இனிய செய்கை அனைத்தினதும்
இருப்பிட ஆண்டாய் அமையட்டும்

உண்மை நேர்மை நீதிகளின்
ஊற்றென இதுவும் இருக்கட்டும்
தின்மை பொசுங்கும் தீச்சுடராய்த்
தரணி தன்னில் திகழட்டும்

வறுமை வாழ்வில் சிக்குண்டு
வசந்தம் தன்னை இழந்தோர்க்குச்
சிறப்பை நல்கும் ஆண்டென்ற
சரித்திர மதனைப் படைக்கட்டும்.

கொடிய யுத்தம் காரணமாய்க்
குருதி சிந்திய மண்ணுக்கு
விடிவைக் கொடுக்கும் ஆண்டாக
விளங்கி இதுவும் திழைக்கட்டும்

இயேசு நாதர் இயம்பிட்ட
இனிய கருத்துரை அத்தனையும்
உயர்ச்சி காணும் ஆண்டதனின்
உருவாய் இதுவும் இருக்கட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதி வேண்டி ஆசிக்கும்
அனைத்து மாந்தர் ஆசைகளும்
சுமையே இன்றி நிறைவாகும்
சிறப்பின் ஆண்டாய்ச் சிறக்கட்டும்.

துன்பம் துயரம் எல்லாமும்
தூர விலகும் வழியாக
நன்றே இந்த வருடமது
நானில் மீதில் மிளிரட்டும்

வசந்தம் வாழ்வில் மேலோங்கும்
வனப்பின் வழியாய் விளங்கட்டும்
உசிதம் எமக்கு உரித்தாக
உரிய சாசன மாகட்டும்

மனித மனத்தில் மகிழ்ச்சியது
மலரும் வழியாய் இவ்வாண்டு
இனிதே இங்கு திகழட்டும்
இன்பச் சுனையாய் இருக்கட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழையே!

மழையே மண்ணின் மகிழ்ச்சிக்கு
மாற்ற மாகப் பொழியாதே!
தழைத்துப் பயிர்கள் சிறப்பதற்குத்
தக்க அளவில் பெய்துவிடு

பிரளய மாக நீஎன்றும்
பூமி மீதில் ஆகாதே!
வரட்சி நீங்கும் அளவுக்கு
வரமாய் எமக்கு ஆகிவிடு

வெள்ளம் என்று நீவந்தால்
வருத்தம் எமக்கு ஆகிடுமே!
பள்ளம் பாதை தரையாவும்
பார்க்கக் கடலாய்த் தோன்றிடுமே!

தினமும் உழைத்து உண்போர்கள்
திகைத்து வீட்டில் முடங்கிடுவர்
உணவும் இன்றிப் பட்டினியில்
உள்ளம் ஒடிந்து போய்விடுவர்

வயலைப் பயிரை மாய்ப்பதிலே
வசந்தம் நீயும் காணாதே!
தயவாய் எமக்கு ஆகிவிடு
தீங்கே இழைத்தல் தவிர்த்துவிடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உந்தன் வருகை மண்ணுக்கு
உன்னத மென்றெ ஆகட்டும்
எந்த இடரும் இல்லாமல்
ஏற்றம் என்றே அமையட்டும்

எனவே மழையே நீஎன்றும்
எமக்கு எளிலாய் ஆகிவிடு
கனவில் கூடப் பிரளயமாய்க்
காட்சி நல்லா திருந்துவிடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துட்டர்

துட்டர் கூடித் தூப மிட்டனர்
தூயோன் பார்ப்பதை மறந்து போயினர்
திட்ட மிட்டே தினமும் எனக்குத்
தீங்குகள் செய்வதில் திளைத்து நின்றனர்

எந்தன் உயர்வை எண்ணி நொந்தனர்
என்றும் கெடுதல் எண்ணம் கொண்டனர்
புண்ணிய மெனக்குப் புரிதல் போல
போலி வேசமும் போட்டே நடந்தனர்

நல்ல நட்பின் நல்லிலக் கணமாய்
நம்பிடும் படிப்பாய் நன்றெ நடித்தனர்
சொல்லிட முடியாச் சோகம் நானும்
சுகிர்த்திட எனக்குச் சதியே செய்தனர்

மாசறு எந்தன் மகிமை போற்றி
மதித்தல் போல மாண்பாய் நடந்தனர்
வாசி ஒன்றே வாழ்வெனக் கொண்டனர்
வாய்மை நெறியை வீசி எறிந்தனர்

பண்பைத் துறந்து பாவி ஆயினர்
போலிக் கோலம் போடலில்த் தேர்ந்தனர்
உண்மை நெறியை உதறித் தள்ளினர்
உலகின் சாப உருவாய் ஆயினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவே!

நினைவே நீயும் நிலைக்காமல்
நீங்கிச் செல்ல மாட்டாயா?
எனையும் வாட்டி வதைக்காமல்
எங்கோ தொலைந்து போகாயோ!

வஞ்சர் கொடுமை நினைவூட்டி
வருத்தம் தினமும் தருகின்றாய்
நங்சை நிகர்த்த அவர்களினை
நசிக்க நாளும் தூண்டுகிறாய்

அமைதி யாக நானுள்ளேன்
அரக்கர் தம்மை நினைவூட்டி
சுமையை நெஞ்சில் தருகின்றாய்
சுகத்தை எல்லாம் கெடுக்கின்றாய்

கொடியோர் எனக்குச் செய்திட்ட
கொடுமை யாவும் செப்பிநீ
அடியொ டவரை யான்மாய்க்க
அகத்தின் உணர்வைத் தூண்டுகிறாய்

கசடர் செய்த தீங்கெல்லாம்
கொஞ்சம் கூட நினைவின்றி
அடியுடன் மறந்த எந்தனுக்கு
அதனை நீயும் மீட்டாதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏற்றம் கண்டிடுமோ!

ஊரை உயர்த்தும் எண்ணத்தில்
உன்னத சேவை செய்திடினும்
பாரில் பார்க்கும் பொல்லார்கள்
பிழையே பகர்வது ஏனாமோ!

சத்திய மிங்கே உரைத்தாலும்
சதியே நிறைந்த வஞ்சகர்கள்
எத்தி எம்மை உதைப்பதிலே
எளிலே காண்பது ஏனாமோ!

உண்மை நேர்மை நெறியினிலே
உன்னத வாழ்வு வாழ்ந்தாலும்
பண்பே இல்லா பாதகர்கள்
பார்த்து நகைப்பது ஏனாமோ!

அறத்தை என்றும் நெறியாக
அமைத்து உயர்வாய் நடந்தாலும்
மறத்தைப் போற்றி நெறியற்றோர்
மகிழ்வில்த் திழைப்பது ஏனாமோ!

நன்மை நாளும் செய்திடினும்
நன்றி கெட்ட நாசத்தார்
கொன்று எம்மை அழித்திடவே
குறியாய் இருப்பது ஏனாமோ!

ஏழ்மை கொண்ட எம்மோரை
ஏற்றம் காணச் செய்திடவே
தாழ்மை யாக உழைத்திடினும்
தவறைச் சாற்றல் ஏனாமோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி இந்த இனத்துள்ளோர்
இழிந்த நடத்தை மேற்கொள்ளின்
எப்படி இனமும் முன்னேறும்
ஏற்றம் தானும் கண்டிடுமோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேடுகின்றேன்

உண்மை மனிதனைக் கண்டிடவே
உவகை கொண்டு அலைகின்றேன்
இன்னும் அவனைக் காணலையே
இருக்கின் றானோ யானறியேன்.

உள்ளத் தூய்மை கொண்டோரை
உவந்தே எங்கும் தேடுகிறேன்
கள்ளம் கொண்ட கயவர்களே
கண்ணிய வானாய் நடிக்கின்றார்

நேர்மை நிறைந்த உள்ளத்தை
நன்றாய் நானும் தேடுகிறேன்
சீர்மை இல்லாக் கீழோரே
சிறப்புற் றிருப்பது காண்கின்றேன்

நற்குண மிக்க மானிடரை
நானும நாடித் தேடுகின்றேன்
அற்பத் தனங்கள் மிக்கோர்தான்
அதிகம் இங்கே காண்கின்றேன்

போலித் தன்மை கொண்டோரைப்
புனிதர் என்றே பூசிக்கும்
கோலம் கொண்ட புவியினிலே
காண்பதில் அதிகம் கள்ளம்ந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொல்லார் பெரியார் ஆகிட்டார்

நல்லோர் பெரியார் என்றில்லை
நற்குண மின்று நலிந்தாச்சி
பொல்லார் பெரியார் ஆகிட்டார்
பொல்லாச் செயலே புகழாச்சி

நீதி இங்கே நிலைகுன்றி
நீசர் கரங்கள் உயர்ந்தாச்சி
ஓதி உயர்ந்தோர் ஒதுங்குகிற
ஒட்டு மொத்த நிலையாச்சு

உண்மை நேர்மை உறங்கிங்கே
உழுத்தர் உயர்ந்தோர் என்றாய்ச்சி
வன்முறை வாழும் நிலையாச்சி
வஞ்சர் வாழ்வும் உயர்ந்தாச்சி

சத்திய மிங்கே சரிந்தாச்சி
சதியே நன்கு சிறந்தாச்சி
உத்தம ருள்ளம் உடைந்தாச்சி
உரிமைக் குரலும் விலைபோச்சி

போலிகள் இங்கே தலைமையெனப்
போடும் வேசம் நிறைந்தாச்சி
காலம் நன்கு கனிவதெலாம்
கசடர்க் கென்ற நிலையாச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நஞ்சே போல்வர் என்போமே!

உள்ளம் உடைந்து போகிறதே
உழுத்தர் செயலைக் காணுகையில்
கள்ளம் செய்தே காலத்தைக்
களிப்பாய் நாளும் கடத்துகிறார்
குள்ளத் தனமாய்ச் சிந்தித்தே
கொடுமை புரிந்து வாழ்கின்றார்
எள்ளள வேணும் நேர்மையின்றி
என்றும் தீங்கில் திளைக்கின்றார்

சத்திய நெறியைத் தம்நெறியாய்ச்
சந்தியில் நின்றே நவில்கின்றார்
உத்தம மனிதர் தாமென்று
உரைத்தே நடித்து வாழ்கின்றார்
எத்தனை கொடுமை என்றாலும்
எளிலாய் ஏற்றுக் செய்கின்றார்
இத்தரை மீதில் இவர்பிறப்பால்
இன்னல் தானே மானிடர்க்கு

பணமே வாழ்வாய்க் கொண்டதனால்
பண்புகள் இழந்து வாழ்கின்றார்
குணமே அற்றுத் தம்நெஞ்சைக்
குற்றச் செயலால் நிறைத்துள்ளார்
தினமும் தூங்கும் பொழுதினிலும்
தீங்கின் நினைவில் திளைக்கின்றார்
இனப்பகை தூண்டிக் குழப்பத்தில்
இன்பம் கண்டே மகிழ்கின்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்தோர் துன்பம் காணுகையில்
அகத்தில் மகிழ்வே அடைகின்றார்
அடுத்துக் கெடுக்கும் காரியத்தில்
அதிக நாட்டம் கொள்கின்றார்
படுத்து உறங்கும் வேளையிலும்
பாவச் செயலே நினைக்கின்றார்
நெடுநிலப் பிறப்பில் இன்னோரை
நஞ்சே போல்வர் என்போமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரியவர்கள் உரைக்கும் போது...

உரிமைகளைச் சலுகை என்றும்
உண்மைதனைப் பொய்மை என்றும்
சிறப்பதனைச் சிறுமை என்றும்
சிந்தைதனை மடமை என்றும்
சிரிப்பையே அழுகை என்றும்
சிறுமைதனைப் பெருமை என்றும்
உரியவர்கள் உரைக்கும் போது
உண்மையாய்ப் போகு திங்கே!

நண்பர்களைப் பகைவர் என்றும்
நற்செயலைத் தீது என்றும்
இன்பத்தை இன்னல் என்றும்
இருப்பதனை இல்லை என்றும்
நன்றதனை நாசம் என்றும்
நவில்கின்ற அதிகா ரத்தின்
தன்மையோர் கூற்று நன்கு
தழைத்தேதான் ஓங்கு திங்கே!

கதிரோனை மேற்குத் திக்கில்
கட்டாயம் உதிக்கச் செய்வேன்
நதிகளையும் மேட்டை நோக்கி
நன்றாகப் பாயச் செய்வேன்
கதியிலார் உயர்ச்சி காணச்
கண்டிடுவேன் வழியும் என்று
அதிகாரம் கொண்டோர் சொல்லின்
அதையேற்போர் அதிக மிங்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதி நிலவ வேண்டும்

நாட்டினிலே அமைதி நிலவ வேண்டும்
நல்மகிழ்ச்சி எங்கும் நிறைய வேண்டும்
வாட்டுகின்ற யுத்தம் விரைவாய் இந்த
வையத்திலே தொலைய வழியும் வேண்டும்
காட்டினிலே களிப்பாய்க் காலம் கடத்தி
கனிவகைகள் உண்டு களிக்க வேண்டும்
மூட்டிட்ட தீயில் முட்டிய பஞ்சாய்
முற்றாக இனப்பகை மாய வேண்டும்

நல்லோரின் கரத்தில் நாட்டின் ஆட்சி
நன்றாக இருந்திடும் நிலையும் வேண்டும்
இல்லாமை நாட்டில் இல்லா தாகி
இலட்சியமே வாழ்வின் இருப்பாய் வேண்டும்
கல்லாமை முற்றாய்க் கலைய வேண்டும்
கண்ணியமும் ஓங்கிக் கனக்க வேண்டும்
எல்லோரும் நாட்டில் ஏற்றம் காணும்
ஏற்றமிகு சிந்தை என்றும் வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைஞ்சல்

உண்மை நேர்மை உயரிய நோக்கு
பண்பு பக்குவம் பணிவின் உள்ளம்
நன்கே அமைந்து நானிலம் நானும்
நன்முறை வாழ நாயன் இறையே!
உன்னுடை அச்ச உணர்வை உளத்தில்
நன்கே அருள்வாய் நாளும் எனக்கு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மை உணர்ந்து நடந்திடுவாய்

உண்மை உணர்ந்து நடந்திடுவாய்
உன்னத நெறியைப் பற்றிடுவாய்
நன்மை நாடிச் செய்திடுவாய்
நல்லோன் என்றே வாழ்ந்திடுவாய்

வஞ்சனை செய்தல் விட்டிடுவாய்
வாய்மை நன்கு பேணிடுவாய்
தஞ்சம் என்றும் காத்திடுவாய்
தர்ம நெறியைப் பற்றிடுவாய்

தீங்கே புரிதல் தவிர்த்திடுவாய்
தீயோர் உறவை விலக்கிடுவாய்
பாங்கர் தம்மை மதித்திடுவாய்
பணிவைப் பற்றி நடந்திடுவாய்

பொய்மை போக்கித் திகழ்ந்திடுவாய்
பொல்லாத் தனத்தை நீக்கிடுவாய்
மெய்மை பேணி வாழ்ந்திடுவாய்
மேதினி வாழ்த்த மிளிர்ந்திடுவாய்

சத்திய நெறியில் நிலைத்திடுவாய்
சதியைத் தாங்கி ஜெயித்திடுவாய்
உத்தம னென்றே உயர்ந்திடுவாய்
உறவை நன்கு மதித்திடுவாய்

பெற்றோர் தம்மைப் பேணிடுவாய்
பெரியோர் புனிதம் காத்திடுவாய்
கற்றோர் மகிமை போற்றிடுவாய்
கல்வியை நாடிக் கற்றிடுவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுத்தம் பேணி நடந்திடுவாய்
சிறந்த நூல்கள் படித்திடுவாய்
யுத்தம் என்றும் வெறுத்திடுவாய்
யாவும் தெளிவாய் அறிந்திடுவாய்

சுதந்திர உணர்வை மதித்திடுவாய்
சோம்பல் முற்றாய்த் தவிர்த்திடுவாய்
உதவி உவந்தே செய்திடுவாய்
உரிமை காத்தே வாழ்ந்திடுவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏற்றம் வாழ்வில் காண்பாயே!

நீலக்கடலின் கரையினிலே
நின்றே நீயும் சிந்தித்தால்
பாலை நிலமாய் உன்வாழ்வு
பாரில் ஆகிப் போய்விடுமே

கடலின் அலைக்கு அஞ்சாமல்
கனத்த காற்றைப் பாராமல்
திடமாய் ஓடம் ஓட்டாமல்
தக்க செல்வம் கிட்டிடுமோ!

கடலின் ஆழம் கண்டேநீ
கடுமை அச்சம் அடைவாயேல்
படகை கடலில் ஓட்டுவதற்குப்
பலமும் நீதான் பெறுவாயோ!

முத்தை எடுக்கும் முயற்சியிலே
மூச்சை அடக்கிக் கடலினிலே
எத்த னிக்க நீதுணிந்தால்
ஏற்றம் வாழ்வில் காண்பாயே!

இயலும் என்ற எண்ணத்தில்
இனிதே நீயும் செயலாற்றின்
உயர்ச்சி உன்னை நாடிவரும்
உலகும் உன்னை உவந்தேற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகத்தில் நினைவாய் வருகிறது

பணத்தின் திமிரால் நீயும்நற்
பண்பை இழந்து போனாயே
பிணமே உண்ணும் பேய்யென்றே
பெயரும் பெற்றுத் திகழ்ந்தாயே!

நல்லோர் தம்மை நசுக்குவதில்
நன்றாய் நாளும் நின்றாயே
பொல்லாத் தனங்கள் புரிவதிலே
பெரிதும் உவகை கொண்டாயே

இறையின் நீதி வருமென்று
இம்மி யளவும் நம்பாமல்
பெருமை கொண்டு திரிந்தாயே
பாவம் பலவும் புரிந்தாயே!

இன்று நீயும் முதுமையினால்
இயலா நிலையில் உள்ளாயே
அன்று செய்த பாவத்தை
ஆய்ந்தே மீட்டிப் பார்ப்பாயா!

உலகில் வாழும் காலத்தில்
உன்னத நெறியில் நின்றிருப்பின்
உலகும் உன்னை உவந்திருக்கும்
உனக்காய் உதவ வந்திருக்கும்

இன்று யாரும் உதவாமல்
இருக்கும் உன்னைப் பார்க்கையிலே
அன்றைய உந்தன் நடத்தைதான்
அகத்தில் நினைவாய் வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறரின் முடிவில் இருந்தாயேல்...

அடுத்தோர் சொல்லை கேட்பதுதான்
அதிக அழிவின் வழிதலைவா!
எடுக்கும் முடிவு உன்முடிவாய்
என்றும் இருக்க நடந்திடுவாய்

பிறரின் முடிவில் இருந்தாயேல்
பிழையாய் நீயும் சென்றிடுவாய்
முறையாய் முடிவை எடுத்தாயேல்
முற்றாய் வெற்றி கண்டிடுவாய்

என்றும் உந்தன் முடிவினிலே
எந்தத் தளர்வும் இல்லாமல்
நன்றே அதனை நிறைவேற்றி
நல்ல தலைவன் என்றாவாய்

நல்ல தலைமை எல்லாமும்
நாசம் அடைந்து போவதற்குப்
பொல்லார் சொல்லைக் கேட்பதுதான்
பெரிதும் காரண மென்றறிவாய்

உந்தன் முடிவு அத்தனையும்
உன்னத முடிவாய் இருந்திடிலோ
இந்த உலகில் உன்தலைமை
இனிய தலைமை என்றாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்பம் இனிதே இலங்கச் செய்

இறைவா எங்கள் நாட்டினிலே
இன்பம் இனிதே இலங்கச்செய்
குறைகள் இன்றி மாந்தரெலாம்
குதுகல மாக வாழச்செய்

நாட்டில் வாழும் மக்களிடை
நன்றாய் ஒற்றுமை ஓங்கச்செய்
காட்டில் வாழும் பட்சியென
களிப்பாய் இருக்க வகையும்செய்

இங்கே நிலவும் இனப்பூசல்
இல்லா தொழிந்து போகச்செய்
எங்கும் அமைதி அரசோட்ச
ஏற்ற வழியை விரைவாய்ச்செய்

மனித தர்மம் நிலைத்திங்கு
மக்கள் மனங்கள் மகிழச்செய்
இனிய சிந்தை கொண்டோராய்
இலங்கை மாந்தரைத் திகழச்செய்

வறுமை நோய்கள் இல்லாமல்
வளமே நாட்டில் பெருகச்செய்
பரந்தநோக்கில் மக்களெலாம்
பண்பாய் நடக்க வழியும் செய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூதூர்ப் புலவர் உமர்நெய்னார்
முறையாம் பேரர் 'அனஸ்' என்பார்
காதூர் மனிதக் கவிநூலைக்
காட்டிக் கருத்துரை தருகென்றார்!

கற்றேன் நற்குறள் - நேர்வெண்பா
கனவெவ் வேறு பாடல்எலாம்
நற்றேன் எனவே சுவைத்தனவே,
நானும் சுவையில் தோய்ந்தேனே!

வங்கக் கடலைப் போன்றுதமிழ்
வந்தே அலையலை பாடல்களாய்த்
தங்கிப் பெருகுதல் ஓர்வியப்பே,
தரலாம் இன்னும் இவர்பலநூல்!

முயற்சிகள் பலவாம் - தேடல்பல!
மூதூர் மண்ணின் பெருமைபல!
அயர்ச்சியி லாமல் இயங்கியுள்ளார்,
'அனஸ்'ஓர் அருமை எழுத்தாளர்!

நற்சிந் தனையும், இறைவிருப்பும்,
நல்ல கருத்தும் தரும்பாநூல்
கற்போர் நெஞ்சை மகிழ்விக்கும்,
காய்வில் லாதார் பெறமுனைவார்!

புலமை மரபில் வந்த'அனஸ்'
போகப் போகப் புகழ்பெறுவார்!
நலமுடன் வாழ்ந்து மேன்மேலும்
நன்னூல் தர யான் வாழ்த்துகிறேன்.

-'தாமரைத்தீவான்'-



மூதூர் எம்.எம்.ஏ.அனஸ்

ISBN 978-955-44598-7-8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Print By: SS Digital's - Trinco 0777695635